





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.10.2025) நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை சார்பில் கோயம்புத்தூர், கோல்டுவின்ஸ் முதல் உப்பிலிபாளையம் வரை 1791 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாட்டின் மிக நீளமான 10.10 கிலோ மீட்டர் நீளம் கொண்ட நான்கு வழித்தட மேம்பாலத்திற்கு ”ஜி.டி. நாயுடு மேம்பாலம் என்று பெயர் சூட்டப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து, பார்வையிட்டார். உடன் நெடுஞ்சாலை மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. ஆகியோர் உள்ளனர்.

### கோவையின் தொழில் வளத்திற்கு முன்மாதிரியாக உலகத்தரமான பாதுகாப்புடன்

# ரூ.1791 கோடி செலவில் “ஜி.டி.நாயுடு” மேம்பாலம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, அக். 10 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.10.2025) நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை சார்பில் கோயம்புத்தூர், கோல்டுவின்ஸ் முதல் உப்பிலிபாளையம் வரை 1791 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாட்டின் மிக நீளமான 10.10 கிலோ மீட்டர் நீளம் கொண்ட நான்கு வழித்தட மேம்பாலத்திற்கு “ஜி.டி. நாயுடு மேம்பாலம்” என்று பெயர் சூட்டப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.**

**ஜி.டி. நாயுடு மேம்பாலம்**

கோவையின் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏதுவாக இந்நகரின் நுழைவுவாயிலாக அவிநாசி சாலை (SHU52) அமைந்துள்ளது. அவிநாசி சாலையில் உள்ள இரயில் நிலையம், காந்திபுரம் பேருந்து நிலையம் செல்லும் சாலை, விமான நிலையம், கொடிசியா, பி.எஸ்.ஜி, சி.ஐ.டி. ஆகிய கல்வி நிறுவனங்கள் மற்றும் கே.எம்.சி.எச் மருத்துவமனை அமைந்துள்ள இச்சாலையின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் கோல்டுவின்ஸ் முதல் உப்பிலிபாளையம் வரை 10.10 கி.மீ. நீளம் கொண்ட உயர்மட்ட சாலை மேம்பாலம் சீர்மிகு கோவையின் தொழில் வளத்திற்கு ஒரு முன் மாதிரியாக கட்டப்பட்டுள்ளது.

கோவை என்றாலே புதுமை என்பதற்கேற்ப, புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளால் பெருமை சேர்த்த இந்தியாவின் எடிசன், தந்தை பெரியாரின் உற்ற கொள்கைத் தோழர் ஜி.டி. நாயுடு அவர்களின் பெயரை முதலமைச்சர் அவர்கள் இந்த மேம்பாலத்திற்கு சூட்டினார்.

**தடையற்ற போக்குவரத்து!**

புதுமைகளை உடனே ஏற்று வரவேற்கும் கோவை மாநகரில் புதுமையான பொறியியல் கட்டுமானம் மூலம் போக்குவரத்தைப் பாதிக்காமலும், சுற்றுபுறச்சூழல் மாசுபடா வண்ணமும் இந்த உயர்மட்ட மேம்பாலம் கட்டப்பட்டுள்ளது. இதனால் கோவையைச் சுற்றியுள்ள IT Corridor, தொழிற்சாலைகள், முதலீட்டாளர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் தங்கு தடையற்ற போக்குவரத்தின் மூலம் கோவையின் புறநகர் பகுதியை விரைவாக சென்றடையலாம்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.10.2025) நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை சார்பில் கோயம்புத்தூர், கோல்டுவின்ஸ் முதல் உப்பிலிபாளையம் வரை 1791 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாட்டின் மிக நீளமான 10.10 கிலோ மீட்டர் நீளம் கொண்ட நான்கு வழித்தட மேம்பாலத்திற்கு ”ஜி.டி. நாயுடு மேம்பாலம்” என்று பெயர் சூட்டப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். உடன், அமைச்சர்கள் எ.வ.வேலு, சு. முத்துசாமி, தா.மோ.அன்பரசன், மு.பெ. சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.செந்தில்பாலாஜி, ஈ.ஆர்.ஈஸ்வரன், முன்னாள் அமைச்சர் பொங்கலூர் நா. பழனிசாமி, அரசு உயர் அலுவலர்கள் மற்றும் ஜி.டி. நாயுடு அவர்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

இந்த உயர்மட்ட மேம்பாலப் பணிக்காக செக்மண்டல் கட்டுமான முறை (PSC Segmental Construction) பயன்படுத்தப்பட்டுள்ளது. பாலத்தின் அமைவுமுறை நெடுஞ்சாலைத்துறையின் வடிவமைப்பு அலகினால் சரிபார்க்கப்பட்டது.

**மேம்பாலத்தால் இணைக்கப்படும் சாலைகள்**

மேம்பாலம் அனைத்து சாலைப் பயனாளர்களும் பயன்படுத்தும் விதத்தில் அண்ணா சிலை இறங்குதளம், இரயில் நிலையம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் காந்திபுரம் பேருந்து நிலையம் ஆகியவற்றை இணைக்கிறது. நவஇந்தியா இறங்குதளம் மேட்டுப்பாளையம் மற்றும் ஊட்டி சாலையை இணைக்கிறது.

நவஇந்தியா ஏறுதளம் அவிநாசி, திருப்பூர் மற்றும் சேலம் சாலையை இணைக்கிறது. ஹோப் காலேஜ் ஏறுதளம் திருச்சி ராப்பள்ளிமார்க்கமாகதேசியநெடுஞ்சாலையை (தே.நெ.67) இணைக்கிறது. ஹோப் காலேஜ் இறங்குதளம் திருச்சிராப்பள்ளி சாலை மற்றும் விளாங்குறிச்சி சாலையை இணைக்கிறது. விமானநிலைய இறங்குதளம் நீலாம்பூர், சேலம்கொச்சின் சாலையை இணைக்கிறது. விமான நிலைய ஏறுதளம் கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளான காந்திபுரம், அரசு மருத்துவமனை, இரயில் நிலையம் ஆகிய பகுதிகளை இணைக்கிறது.

**மேம்பாலத்தின் பொறியியல் சிறப்பம்சங்கள்**

இப்பணியில் 4 வழித்தட மேம்பாலம் மற்றும் 6 வழித்தடத்துடன் கூடிய விரிவு படுத்தப்பட்ட தரைத்தள சாலை என மொத்தம் 10 வழித்தடங்களுடன் 10.10 கி.மீ நீளத் திற்கு அமைக்கப்பட்டுள்ளது.

கோவை விமான நிலையம், ஹோப் காலேஜ், நவ இந்தியா மற்றும் அண்ணா சிலை என மொத்தம் 4 இடங்களில் இறங்கு தளம் மற்றும் அண்ணா சிலை தவிர மற்ற 3 இடங்களில் ஏறுதளம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பணியில் 1.50 மீட்டர் அகலத்தில் நடைபாதையுடன் கூடிய வடிகால் அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பாலம் புதிய தொழில்நுட்பங்களுடன் சைனஸ் பிளேட் விரிவு இணைப்புகள் (Expansion joint), சிறந்த பயண வசதி, ஒலி குறைப்பு உள்ளிட்ட வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

**மேம்பாலத்தின் இதர சிறப்பம்சங்கள்**

இப்பாலத்தின் ஓடுதளத்தின் கீழ் மழைநீர் சேகரிப்பு அமைப்பு - நிலத்தடி நீர் வளத்தை மேம்படுத்தும் முன்னோடி முயற்சியாக மேற்கொள்ளப்பட்டது. மேலும், உயர்மட்ட மேம்பாலத்தின் சென்டர் மீடியன் பகுதியில் நடப்பட்டுள்ள செடிகளுக்கு சொட்டு நீர்ப்பாசனம் (Drip Irrigation), தரைமட்டத்தில் தெளிப்பு நீர்ப்பாசனம் (Sprinkler Irrigation) ஆகியவை அமைக்கப்பட்டதன் மூலம் நகரின் அழகும் ஆரோக்கிய சூழலும் மேம்படும். மேலும், மின்சார சேமிப்பு விளக்குகள் (Solar) மாசு கட்டுப்பாட்டையும், அதிக பாதுகாப்பையும் உறுதி செய்கிறது. அத்துடன் பாதுகாப்புச் சுவர்கள், ரோலர் தடுப்பு (Roller Crash Barrier) கருவிகள் போன்ற உலகத் தரமான பாதுகாப்பு அமைப்புகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இப்புதிய உயர்மட்ட மேம்பாலம் மூலம், கோயம்புத்தூர் நகரிலிருந்து விமான நிலையத்திற்கு பயணம் செய்யும் நேரம் 45 நிமிடத்தில் இருந்து 10 நிமிடமாக குறைவதோடு, பெருவாரியான பொதுமக்கள், மாணவர்கள், தொழிலாளர்கள், ஊழியர்கள், அவசர சேவை பயனாளிகள், முதலீட்டாளர்கள் ஆகியோர் பயன்பெறுவர்.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறை முங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.செந்தில்பாலாஜி, ஈ.ஆர்.ஈஸ்வரன், முன்னாள் அமைச்சர் பொங்கலூர் நா. பழனிசாமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை செயலாளர் மரு. ஆர். செல்வராஜ், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க. கிரியப்பனவர், தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்) முனைவர் ஆர். கிருஷ்ணசாமி, அரசு உயர் அலுவலர்கள் மற்றும் ஜி.டி. நாயுடு அவர்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

---

### கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் – நாளை

# திருவாரூரில் மாபெரும் கருத்தரங்கம்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை!

## அணியின் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

*சென்னை, அக்.10-*

*கழகசிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் நாளை திருவாரூரில் மாபெரும் கருத்தரங்கம் நடைபெறுகிறது. இதில் அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் மற்றும் பலர் சிறப்புரையாற்றுகின்றனர் என்று கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் அன்றும்!. இன்றும்! என்றும்! சிறுபான்மையின மக்களின் காப்பான் தி.மு.க. எனும் தலைப்பில் நாளை (11.10.2025 - சனிக்கிழமை) மாலை 4 மணியளவில் தமிழினத் தலைவர் முத்தமிழ றிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் சொந்த ஊரான திருவாரூரில் உள்ள பொன்தமிழ் திருமண மண்டபத்தில் நடை பெறவுள்ளது.*

*இந்நிகழ்வில் திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன். எம்.எல்.ஏ. சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி.சா.மு.நாசர், தமிழ்நாடு சிறுபான்மையினர் நல வாரியத் தலைவர் அருட்தந்தை ஜோ. அருண், வாரியத் துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ் மற்றும் தமிழ்நாடு வக்பு வாரியத் தலைவர் நவாஸ்கனி எம்.பி. ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்ற உள்ளனர்.*

*மேலும் இந்நிகழ்வில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாநில தலைவர், துணைத் தலைவர், இணைச் செயலாளர், மாநில துணைச் செயலாளர்கள், திருவாரூர், தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு,*

*தஞ்சை மத்திய மாவட்டம், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் கழக மாவட்டங்களை உள்ளடக்கிய சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாவட்ட தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் மற்றும் மாநகரம், ஒன்றியம், நகரம்,பகுதி மற்றும் பேரூர் கழக நிர்வாகிகளுடன் இஸ்லாமிய, கிறிஸ்துவ, புத்தம், ஜைனம் மற்றும் பல சிறுபான்மையின அமைப்புகளின் பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர்.*

*எனவே சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள சிறுபான்மையின அமைப்பின் பிரதிநிதிகளும் மற்றும் பொதுமக்களும் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

---

### தியாகி இமானுவேல் சேகரனாரின்

# சமத்துவத்துக்கான போராட்டங்கள் தொடர்ந்து வழிகாட்டும்!

## பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

**சென்னை, அக். 10 -**

**தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-**

ஒடுக்கப்பட்ட இனத்தின் மீட்சிக்காகவும் மாண்புக்காகவும் இறுதிவரை போராடிய தியாகி இமானுவேல் சேகரனாரின் பிறந்தநாளில் அவரைப் போற்றி வணங்குகிறேன்.

இமானுவேல் சேகரனாரின் பிறந்த நாள் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என நமது திராவிட மாடல் அரசின் சார்பில் அவரது நூற்றாண்டை யொட்டி அறிவிக்கப்பட்டு, கடந்த ஆண்டு முதல் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

இமானுவேல் சேகரனாருக்குப் பரமக்குடியில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்படும் என்ற நமது அரசின் மற்றொரு அறிவிப்பும் செயல்வடிவம் பெற்று,

இம்மாத இறுதிக்குள் முழுமையடையத் தயாராக உள்ளது.

எல்லாருக்கும் எல்லாம் எனும் நம் பயணத்தில் சமத்துவத்துக்கான அவரது போராட்டங்கள் தொடர்ந்து வழிகாட்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

# புவனகிரி தொகுதி வாக்குச்சாவடி நிலை முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார்!

கடலூர், அக். 10 –

கடலூர் கிழக்கு மாவட்டம், புவனகிரி சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி நிலை முகவர்கள் ஆலோசனைக் கூட்டம், சேதியதோப்பு, கேகேஎஸ் திருமண மண்டபத்தில், 08.10.2025, மாலை 5 மணியளவில் நடைபெற்றது. வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சரும், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலா ளருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்புரை யாற்றினார். கழக சட்டத்திட்ட திருத்தக்குழு செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி. கலந்துகொண்டு சிறப்புரை யாற்றி ஆலோசனை வழங்கினார். முன்னாள் எம்.எல்.ஏ., துரை.கி.சரவணன், தலைமைக் கழக பார்வையாளர் சிவா, மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், மாவட்ட துணை செயலாளர்கள் அ.ஞானமுத்து,ஆர்.சக்திவேல், சுதா சம்பத் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் புவனகிரி கிழக்கு, புவனகிரி மேற்கு, புவனகிரி மத்தியம், கீரப்பாளையம் கிழக்கு, கீரப்பாளையம் மேற்கு, கீரப்பாளையம் மத்தியம், கம்மாபுரம் தெற்கு, கம்மாபுரம் வடக்கு, கம்மாபுரம் மத்தியம், புவனகிரி பேரூர், சேத்தியதோப்பு பேரூர் ஆகிய பகுதிகளை சேர்ந்த வாக்குச்சாவடி நிலை முகவர்கள் அனைவரையும் தனித்தனியாக அழைத்து எவ்வாறு பணியாற்றுகிறார்கள் என வேளாண்மை மற்றும் உழவு நலத் துறை அமைச்சரும், மாவட்ட கழக செயலாளருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் கேட்டறிந்தார்.

இந்நிகழ்வில், ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஏ.எஸ்.மதியழகன், ஏ.எம்.மதியழகன், வெற்றிவேல் வி.ஜி.பி.சபாநாயகம், ஆர்.திருமூர்த்தி வி.பி.பாலு கே.ஆர்.ராயர் பா.திருமாவளவன் பி.சுந்தரபாண்டியன், பேரூர் கழக செயலாளர் டி.கந்தன் வழக்கறிஞர் மனோகர், தலைமை செயற்குழு உறுப்பினர் விக்கிரமன், பொதுக்குழு உறுப்பினர் கே.பி.ஆர். பாலமுருகன், இரா.தமிழரசன், மாவட்ட மகளிரணி அமுதராணி, மாவட்ட மகளிரணி துணை தலைவர் எஸ்.மலர்விழி,மாவட்ட விவசாய தொழிலாளர் அணி ராமசாமி உள்ளிட்ட ஒன்றிய,பேரூர் கழக நிர்வாகிகள், வாக்குச்சாவடி நிலைய முகவர்கள் கலந்துகொண்டனர்.